தி.மு.க தலைவர் ஆட்சியில் அமைதிப் பூங்காவாக இருந்த

தமிழ்நாட்டில் தற்போது சட்டம், ஒழுங்கு சந்தி சிரிக்கிறது!

தேனி உள்ளிட்ட பல இடங்களில் நடந்த 15 கொலைகள் குறித்து – முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் கண்டனம்!

தேனி, நவ. 10-

தேனி உள்ளிட்ட பல வேறு இடங்களில் பண்டிகையன்று ஒரே நாளில் 15 படுகொலைகள் நடைபெற்றுள்ளது. அதிர்ச்சியளிக்கிறது. தி.மு.க. தலைவர் ஆட்சியில் அமைதிப் பூங்காவாக இருந்த தமிழ் நாட்டில் தற்போது கூட்டம், ஒழுங்கு சந்தி சிரிக்கிறது''என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

கடந்த 6 மாதங்களாக தமிழகத்தில் தினம்தோறும் படுகொலைகள், பாலியல் வன்முறைகள், திருட்டு, கொள்ளை, 17 கைதிகள் தப்பி ஓட்டம், போதைப் பொருள் கலாச்சாரம், வழிப்பறி ஆகியவை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ச்சி பெற்று தொடர்கதையாக இருந்து வருகின்றன.



தமிழக மக்களுக்கும் பாதுகாப்பில்லை, காவல் துறையினருக்கும் பாதுகாப்பு இல்லை என்பதற்கு உதாரணமாகத்தான் நேற்று பண்டிகை நாளன்று இரவு தேனி அல்லிநகரத்தில் SSI படுகொலை செய்யப்பட்ட நிகழ்வு திகழ்கிறது.

தேனியில் சிறப்பு ஆய்வாளர் கொலை!

சமதர்மபுரத்தில் பொது மக்களுக்கு இடையூறாக வெடிகளை சாலையில் வெடித்துக் கொண்டிருந்தவர்களை கண்டித்த காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் செந்தில்குமார் அவர்கள் மதுபோதையிலிருந்த கும்பலால் அடித்துக் கொல்லப்பட்டார் என்ற செய்தி மிகவும் அதிர்ச்சியும் வேதனையும் அளிக்கிறது.

அகால மரணமடைந்த காவல் துறை அலுவலர் திரு. செந்தில்குமார் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது குடும்பத்திற்கு அரசு உரிய நஷ்டஈடு அளிப்பது மட்டுமின்றி, இப்படு கொலைக்கு காரணமான குற்றவாளிகளை விரைவில் கண்டறிந்து சட்டத்தின் மூலம் கடுமையான தண்டனையை பெற்று தர தமிழக முதல்வர் அவர்கள் உரிய நடவடிக்கையை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேனி பேருந்து நிலையத்தில் போதை கும்பல் மிரட்டல்!

இதுமட்டுமின்றி, நேற்று அதிகாலையில் தேனி பழைய பேருந்து நிலையத்தில் மது மற்றும் கஞ்சா போதையில் இருந்த ஒரு கும்பல், அங்கிருந்த சில பூ வியாபாரிகளை சரமாரியாக தாக்கிய சி.சி.டி.வி. காட்சிகள் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஒரு காவலர் முன்னிலை யிலே இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இது குறித்தும் காவல் துறை விரைவில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நேற்று ஒரே நாளில் மட்டும் தமிழகத்தில், தேனி, கடலூர் சமயபுரம் உட்பட பல இடங்களில் ஒரு இளம் பெண் உட்பட 13 பேர் படுகொலை செய்யப்பட்டார்கள் என்று செய்திகள் வந்துள்ளன.

எனவே, தமிழக அரசு எதிர்க்கட்சியினர் மீது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளை விடுத்து, தமிழக மக்களையும் காவல் துறையினரையும் பாதுகாக்கும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டுமென்று தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

தூத்துக்குடி அருகே கடலில் விழுந்து மாயமான மீனவர் பலி!

மீனவரை மீட்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை!

மீன்வளத்துறை அலுவலகத்தை உறவினர்கள் முற்றுகை!

தூத்துக்குடி, நவ. 10–

தூத்துக்குடி அருகே கடலில் விழுந்து மாயமான மீனவர் பலியானார்.

கரை ஒதுங்கிய உடலை மீட்டு உடற்கூராய்வுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடலில் விழுந்த மீனவரை மீட்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என த.வெ.க. அரசு மீது குற்றச்சாட்டி மீன்வளத்துறை அலுவலகத்தை உயிரிழந்த மீனவரின் உறவினர்கள் முற்றுகையிட்டனர்.

தூத்துக்குடி அருகே, கடலில் தவறி விழுந்து மாயமான மீனவரின் உடல், கரை ஒதுங்கிய நிலையில், அவரது குடும்பத்திற்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தூத்துக்குடி விசைப்படகு மீன்பிடி துறைமுகத்திலிருந்து, மீன்பிடி தொழிலுக்குச் சென்று கரை திரும்பிக் கொண்டிருந்த விசைப்படகில் இருந்து, மட்டக் கடை பகுதியைச் சேர்ந்த தம்பி ராஜ், தவறி கடலில் விழுந்தார். படகிலிருந்த சக மீனவர்கள், இரண்டு விசைப்படகுகள் மூலம் கடலில் விழுந்து மாயமான தம்பி ராஜை தேடினர். மீன்வளத்துறை அதிகாரிகளுக்கு தகவல் அளித்தும், மாயமான மீனவரை தேடுவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என புகார்கள் எழுந்தன. இந்நிலையில் மாயமான மீனவரின் உடல், தூத்துக்குடி புதிய துறைமுகம் பகுதியில் கரை ஒதுங்கியது. இதையடுத்து, போலீசார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்கு அனுப்பினர். இதனிடையே, மீன்வளத்துறை அலுவலகத்தை முற்றுகையிட்ட மீனவர் தம்பிராஜின் உறவினர்கள், மீனவரை மீட்க அதிகாரிகள் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டினார். மீனவரின் குடும்பத்திற்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

ஆர்.எஸ்.பாரதி – நே.சிற்றரசு – படப்பை ஆ.மனோகரன் பங்கேற்பு! ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர்

கெருகம்பாக்கம் ஆ.கோ.அரசு - சரோஜா இல்ல மணவிழா வரவேற்பு!

டி.ஆர்.பாலு எம்.பி. – முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வாழ்த்துகின்றனர்!

காஞ்சிபுரம், நவ. 10-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சிமன்ற முன்னாள் தலைவர் ஆ.கோ.அரசு - சரோஜா ஆகியோரின் பேரனும், அ.வெற்றி செல்வன் - வெ.கல்பனா ஆகியோரின் புதல்வரு மான வெ.கவிபாரதிக்கும், மாங்காடு மு. பாண்டியன் - பா.சாந்தி ஆகியோரின் புதல்வி பா.மோனிசா வுக்கும் மண விழா நாளை (11.11.2026 புதன்கிழமை) காலை 9 மணியளவில் பரணிபுத்தூர், போரூர் - மாங்காடு சாலையில் உள்ள சக்தி பேலஸ் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பு இன்று (10.11.2026 - செவ்வாய்) மாலை 6 மணியளவில் நடைபெறுகிறது.

இம்மணவிழா வரவேற்பில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இம்மணவிழா வரவேற்பில் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ஏ.வந்தே மாதரம், ப.குணாளன், என்.சந்திரன், டி.பாபு, இ.மணி, சரஸ்வதி மனோகரன், உமா மகேஸ்வரி, வந்தேமாதரம், கோ. சத்தியமூர்த்தி, எஸ்.ஜபருல்லா, எம்.கே.டி. கார்த்திக், அ.தமிழ் மாறன், கோல்டு டி. பிரகாஷ், பேரா சிரியர் எல்.பிரபு, சாய் ஜெய் கார்த்தி பாரதி, எம்.எஸ். கே. இப்ராகிம், கே.எத்திராஜ், எம்.ஆர். சீனிவாசன், எஸ்.சதீஷ், இரா.பாஸ்கர், ஆர்.டி.பூபாலன்,

வீ.விஜயகுமார், டி.கே. கமலக்கண்ணன், கோ.ஜான கிராமன், ப.ராமமூர்த்தி, கே.மணி கண்டன், து.சுந்தர், கே.வசீகரன், பொன். ஜீவா, பூங்கொடி அரசு, எஸ்.ராஜா தேசிங்கு, எக். சந்தானம், பா.ராஜேந்திரன், எஸ்.கே. துளசிங்கம், தி.க. பாஸ்கரன், டி.எஸ். எம்.ஜெயகரன், டி.ஆர். சாரதி பெரிய நாயகம், ப.குமரவேலு, சுலைமான் சையத், தமிழரசி சுரேஷ், பரத்ராஜ், வே.பாலாஜி, சு.ஜனார்த்தனன், எம்.ஆர். நவீன்ராஜ், கு.பிரவீன் குமார், ப.கு.தமிழ் வாணன், செ.இமான் கௌதம், செ. அரிபிரகாஷ், ப.சிலம்பரசன் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு

6 மாதங்களில் 2,993 டெண்டர்களை ரத்து செய்த த.வெ.க. அரசு!

வளர்ச்சித் திட்டத்திற்கு வேட்டு வைப்பதா? மக்கள் கேள்வி!

சென்னை, நவ.10-

கடந்த 6 மாதகால த.வெ.க. ஆட்சியில், 2 ஆயிரத்து 993 டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விஜய் அரசின் 6 மாத சாதனை மின் வெட்டு, அரிவாள் வெட்டு, டெண்டர் வெட்டு என நீண்டு கொண்டே செல்கிறது.

தி.மு.க.வை பழிவாங்குவதாகக் கருதி மக்கள் நலத் திட்டங்களுக்கான டெண்டர்களை த.வெ.க. அரசு ரத்து செய்ததன் எதிரொலியாக, தமிழ்நாட்டில் தொடர் மின்வெட்டு நிலவி வருகிறது. இதேபோல், குடிநீர் திட்ட டெண்டர், மின்சார பேருந்து டெண்டர் என ரத்து படலம் நீடிப்பதால், மக்கள் நீண்ட கால துயரங்களை சந்திக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனிடையே, த.வெ.க. ஆட்சியில் எத்தனை திட்டங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பது குறித்து துறை வாரியான விபரங்கள் வெளியாகியுள்ளன.

அதில், நெடுஞ்சாலைத்துறையில், ஓரகடம் - செய்யூர் 4 வழிச்சாலை, அண்ணா சாலை மேம்பாலம், துறைமுகம் - மதுரவாயல் பறக்கும் சாலை, ஹரூர், செஞ்சி, ஓசூர், சேலம் ரிங் ரோடு திட்டங்கள் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் மட்டும் 21 நெடுஞ்சாலைத் துறை லிமிடெட் டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. தவெக ஆட்சிப் பொறுப் பேற்ற ஆறு மாதங்களில் இரண்டாயிரத்து 993 டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து டெண்டர்களை ரத்து செய்வதில் ஆர்வம் காட்டி வரும் த.வெ.க. அரசு, இதுவரை செய்துள்ள மூலதன செலவு எவ்வளவு போக்குவரத்துத்துறையில், சென்னை, கோவை, மதுரைக்கு 500 மின்சார பேருந்துகள் வாங்கும் டெண்டர் மறு ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது.

சென்னையில் 284 கோடி ரூபாய் நடைபாதை திட்டம் மற்றும் 12 மாநகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைக்கான டெண்டர்களும் ரத்து செய்யப் பட்டுள்ளன. நகராட்சி நிர்வாகத் துறையில், சென்னை மாநகராட்சியில் மட்டும் 700 கோடி மதிப்பிலான டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. தவெக ஆட்சிப் பொறுப் பேற்ற ஆறு மாதங்களில் இரண்டாயிரத்து 993 டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து டெண்டர்களை ரத்து செய்வதில் ஆர்வம் காட்டி வரும் த.வெ.க. அரசு, இதுவரை செய்துள்ள மூலதன செலவு எவ்வளவு என கணக்கு காட்ட மறுக்கிறது. விஜய் ஆட்சியில் முதல் 6 மாதம் கடன் வாங்குவதை குறைத்ததாக சொல்லிவிட்டு, அடுத்த 3 மாதத்தில் 48 ஆயிரம் கோடி கடன் வாங்க த.வெ.க. அரசு திட்டமிட்டுள்ளது.

இதுதொடர்பாக, முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், செலுத்தாத நிலுவைத் தொகையை சேமிப்பு என சொல்ல முடியாது என்றும், ஒப்பந்ததாரர்களுக்கு பணம் கொடுக்காமல் நிறுத்தி வைத்து, கடனை குறைந்ததாக த.வெ.க. அரசு பொய் கணக்கு காட்டுவதாகவும் குற்றம்சாட்டியுள்ளார். டெண்டர்களை ரத்து செய்வதால், மக்களுக்குதான் மிகப் பெரிய பாதிப்பு ஏற்படும் என்றும் அவர் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பெரியாரின் அறிவுப் புரட்சியை யாராலும் இருட்டடிப்பு செய்ய முடியாது!

பெரியாரை சிறுமைப்படுத்த நினைப்பவர்கள் சிறுமைப்பட்டுப் போவார்கள்!

ஆதித்தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா.அதியமான் கண்டனம்!

சென்னை, நவ. 10 -

"பெரியாரின் அறிவுப் புரட்சியை எந்த அரசியல் அதிகாரத்தாலும் இருட்டடிப்பு செய்ய முடியாது. பெரியாரை சிறுமைப் படுதத நினைப்பவர்கள் வரலாற்றில் சிறுமைப்பட்டுப் போவார்கள்" என்று ஆதித் தமிழர் பேரவை நிறுவனத் தலைவர் இரா. அதியமான் விடுத்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரி வித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

பெரியாரின் அறிவுப் புரட்சியைச் சிறுமைப் படுத்தவும், நூலகத்தின் சாதனை திமுகவுக்குச் சென்றுவிடக் கூடாது என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சியிலும் அரங்கேற்றப்படும் அறிவுத் திருட்டு நாடகமா இது?

பெரியாரை எதிர்ப்பதற்குப் பார்ப்பன சனாதன சக்திகள் காலங்காலமாகப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு வந்திருக்கின்றன. இப்போது பெரியார் பெயரில் அமைந்த நூலக த்தையே சர்ச்சைக்குரியதாக்கி, பெரியாரின் அறிவுப் புரட்சியைச் சிறு மைப்படுத்தும் முயற்சியில் த.வெ.க. அரசு இறங்கியிருக்கிறதா என்ற வலுவான சந்தேகம் எழுகிறது!

கோவையில் அமைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவுலக நூலகத்தில் நூல்கள் கொள்முதல் செய்ததில் முறைகேடுகள் நடைபெற்றதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. நூல்களின் தரம், பதிப்பகங்களின் நம்பகத்தன்மை, கொள்முதல் நடைமுறைகள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியமானதே!

திட்டமிட்டு சர்ச்சைகளை உருவாக்குவதா?

ஆனால், இந்த விவகாரத்தை அணுகும் தவெக அரசின் அரசியல் நோக்கம் என்ன? பார்ப்பனியத்தையும், சனாதனத்தையும், சாதிய ஏற்றத்தாழ்வுகளையும், மூடநம்பிக்கைகளையும் தனது வாழ்நாள் முழுவதும் எதிர்த்துப் போராடியவர் தந்தை பெரியார்.

அப்படிப்பட்ட பெரியாரின் பெயரில் உருவாக்கப்பட்ட அறிவுலக நூலகத்தின் சாதனைகள் மக்கள் மத்தியில் பேசப்படுவதைத் தடுக்கவும், அந்த நூலகத்தின் பெருமை திமுக அரசுக்குச் சென்றுவிடக் கூடாது என்ற அரசியல் காழ்ப்புணர்ச்சியிலும் திட்டமிட்டு சர்ச்சைகளை உருவாக்குகிறார்களோ என்ற கேள்வி எழுகிறது.

பெரியார் என்ற பெயரை உச்சரிப்பதற்கும், பெரியாரின் கொள்கைகளை ஏற்றுக்கொள்வதற்கும் மிகப்பெரிய வேறுபாடு இருக்கிறது. பெரியாரின் கருத்துகளை ஏற்க மறுப்பவர்கள்கூட அவரது பெயரில் உருவாக்கப்பட்ட அறிவுக் கருவூலத்தைச் சிறுமைப் படுத்தும் அரசியலில் ஈடுபடுவது வன்மையான கண்டனத்திற்குரியது.

முதலமைச்சருக்கு விசாரணை நடத்தும் அதிகாரம் இல்லையா?

இங்கே எழும் மிக முக்கியமான கேள்வி என்ன வென்றால்:

காவல்துறையையும் உள்துறையையும் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதல மைச்சர் விஜய் அவர்கள், நூல் கொள்முதல் முறைகேடு குறித்த குற்றச்சாட்டுகளை விசாரிக்க உத்தரவிடாமல், அவரது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர் ஏன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறையான DVACயிடம் புகார் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது?

காவல்துறையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முதலமைச்சருக்கு விசாரணை நடத்தும் அதிகாரம் இல்லையா? அல்லது இந்த விவகாரத்தை அரசியல் நாடகமாக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறதா?



கொச்சைப்படுத்துவதை ஏற்க முடியாது!

தவறு நடந்திருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் யாராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். அதில் எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. ஆனால் விசாரணை என்ற பெயரில் பெரியாரின் அறிவுலகப் பணியையும், அதன் உருவாக்கத்திற்குப் பின்னால் உள்ள அரசியல் சாதனையையும் கொச்சைப்படுத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

பெரியார் நூலகத்தில் முறைகேடு நடந்ததா என்பதை மட்டும்விசாரித்தால் போதாது; பெரியாரின் பெயருக்கு இழுக்கு ஏற்படுத்தும் நோக்கத்தோடு அரசியல் காழ்ப்புணர்ச்சியில் யாரேனும் செயல்பட்டார்களா என்பதையும் விசாரிக்க வேண்டும்.

பெரியாரை எதிர்ப்பது என்பது வெறும் அரசியல் எதிர்ப்பு அல்ல; பார்ப்பனியத்தையும் சனாதனத்தையும் எதிர்த்து உருவான சமூகநீதி வரலாற்றையே மறுத லிக்கும் முயற்சியாகும்.

தி.மு.க. ஆட்சியின் சாதனையை அரசியல் ரீதியாக விமர்சிக்கலாம். ஆனால் அந்த விமர்சனத்திற்காகப் பெரியாரின் பெயரையும், அவரது அறிவுப் புரட்சியையும் பலிகடாவாக்கக் கூடாது.

தவெக அரசே! பெரியாரைச் சிறுமை ப்படுத்தும் அரசியலைக் கைவிடு! நூலகத்தின் பெயரால் எழுந்துள்ள முறைகேடு குற்றச்சாட்டுகளை நேர்மையான, சுதந்திரமான விசாரணைக்கு உட்படுத்து! அரசியல் காழ்ப்புணர்ச்சியின்றி உண்மையை மக்களிடம் வெளிப்படுத்து!

பெரியாரின் அறிவுப் புரட்சியை எந்த அரசியல் அதிகாரத்தாலும் இருட்டடிப்பு செய்ய முடியாது. பெரியாரைச் சிறுமைப் படுத்த நினைப்பவர்கள் வரலாற்றில் சிறுமைப் பட்டுப் போவார்கள்!

ஆதித்தமிழர் பேரவை, பெரியாரின் பகுத்தறிவு, சமூகநீதி, சுயமரியாதைக் கொள்கைகளின் பக்கம் உறுதியாக நின்று த.வெ.க. அரசின் இத்தகைய அரசியல் அணுகுமுறையைக் கடுமையாகக் கண்டிக்கிறது!

இவ்வாறு இரா.அதியமான் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்

கழக நிர்வாகிகளுக்கு சிறப்புப் பரிசுகள்!

மாவட்டச் செயலாளர், மேனாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, நவ.10:

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகி களுக்குப் பட்டாசு, இனிப்பு, காரம் மற்றும் சிறப்புப் பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சி, (08.11.2026, ஞாயிற்றுக்கிழமை) காலை 10.00 மணியளவில், சென்னை ஓட்டேரி, பிரிக்ளின் சாலையில் உள்ள எஸ்.ஆர். மகாலில் நடைபெற்றது.



இந்நிகழ்ச்சியில், சென்னை கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மேனாள் அமைச்சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ., திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநிலக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள், மாவட்டக் கழக அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், பகுதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், கழக அணிகளின் பகுதி மற்றும் வட்ட அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுக்குப் பட்டாசு, இனிப்பு மற்றும் சிறப்புப் பரிசுகளை வழங்கி, நல்வாழ்த்துகளைத் தெரிவித்துச் சிறப்பித்தார்.

இந்நிகழ்ச்சியில், மேயர் பிரியா ராஜன், கே.எஸ். ரவிச்சந்திரன், இசட். ஆசாத், எம். சாமிக்கண்ணு, புலவர் சாமிநாகப்பன், எழிலன், இரா. வீரமணி, எம். பெரோஸ்கான், கா. ராஜா முகமது, அ. கோவிந்தன், த. கருணாநிதி, சுகுமார், வனஜா சண்முகம், அ. கருணாநிதி, தில்லைகதிரவன், பெரம்பூர் ஆர். ராஜன், புல்லட் ரமேஷ், பி. புவனவதி, கினார் ஆறுமுகம் ஆகியோரும்,

வட்டக் கழகச் செயலாளர்கள் எஸ். சசிகுமார், வி.க.வெங்கடேசன், எஸ். வெங்கடேசன், எம்.தமிம், கே.சுரேஷ்குமார் (எ) பொல்லு சுரேஷ், மா. ருத்ர மூர்த்தி, ஜி. கிருஷ்ணகுமார், எஸ்.புஷ்பராஜ், எம்.இசட். அபாய், எம்.ஏ. டீக்கா, பரிமளா சுரேஷ்பாபு மற்றும் மாவட்டக் கழக அணிகளின் துணை அமைப்பாளர்கள், பகுதி மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், செயல்வீரர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மதுரையில் குழந்தைகள் நல மருத்துவமனை கட்டுவதில்

த.வெ.க. அரசு ரூ.9.32 கோடி ஊழல்!

கணக்காயர் ஆய்வில் அம்பலமான த.வெ.க. ஆட்சியாளர்களின் முறைகேடு!

மதுரை, நவ.10-

மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் குழந்தைகள் நலப்பிரிவு கட்டடம் கட்ட, த.வெ.க. அரசு வெளியிட்ட அரசாணையில், 2 மாடி கட்டிடம் என சொல்லி, 5 மாடிக்கு அஸ்திவாரம் போட்டு கட்டிடத்தின் பரப்பளவை மாற்றியமைத்து, 19 கோடி ரூபாய்க்கு டெண்டர் விட்டது அம்பலமாகியுள்ளது. பின்னர், இந்த முறை கேட்டை மூடி மறைக்க, அரசாணையை திருத்தி த.வெ.க. அரசு, மீண்டும் ஒரு அரசாணையை ரகசியமாக வெளியிட்டுள்ளதும் அம்பலமாகியுள்ளது.

புதிய கட்டிடத்திற்கு அரசு மதிப்பிட்டது 18 கோடியே 79 லட்சம் ரூபாய், ஆனால் டெண்டர் விட்டது 19 கோடியே 7 லட்சம் ரூபாய் என குளறுபடிகள் உள்ளது. 19 கோடியே 7 லட்சத்துக்கு நடைபெற வேண்டிய வேலை, வெறும் 9 கோடியே 46 லட்சம் ரூபாய்க்கு மட்டுமே நடந்துள்ளது. எஞ்சிய 9 கோடியே 61 லட்சம் ரூபாய் எங்கே போனது என்பது கேள்விக்குறியாக உள்ளது. கூடுதல் அளவு, கூடுதல் பொருள் என்ற பெயரில் 9 கோடியே 32 லட்சம் ரூபாய்க்கு கூடுதல் செலவு கணக்குக்காட்டிய த.வெ.க. அரசின் ஊழல் வெட்டவெளிச்சமாகியுள்ளது.